# போபே போத்தல பிரதேச சபை

# காலி மாவட்டம்

----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுலை 07 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்டம்பர் 29 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு போபே போத்தல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 388,525 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 396,192 தொகையென காட்டப்பட்டிருந்தமையால் நீதி மன்றத் தண்டப்பண வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 7,667 வீதம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திறைசேரி உண்டியலில் முதலீடுகளின் பெறுமதி ரூபா 1,396,104 தொகை எனினும் அவை நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,352,159 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் திறைசேரி உண்டியல் முதலீட்டுக் கணக்கு மீதி ரூபா 43,945 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் இரண்டாவது அரை ஆண்டு தொடர்பாக காலி பதிவாளர் நாயக அலுவலகத்தில் இருந்து பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 10,385,422 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 6,000,000 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் கடன்பட்டோர் மற்றும் திரண்ட நிதியக் கணக்கு மீதி ரூபா 4,385,422 வீதம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பலப்பிட்டிய மற்றும் எல்பிட்டிய பதிவாளர் நாயக அலுவலகத்தில் இருந்து மீளாய்வாண்டு தொடர்பாக பெற வேண்டிய ரூபா 1,085,540 இற்கான முத்திரைக் கட்டண வருமானம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 1,085,540 வீதம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(உ) சம்பள மீளளிப்பு தொகை என உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 21,024,623 இற்கான தொகை அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் பகிரப்படாமல் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 1,697,914 இற்கான நிலையான சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(எ) முன்னைய ஆண்டின் போது ரூபா 33,992 இற்கு கொள்வனவு செய்திருந்த 20 அடி உயரமான ஏணி மீளாய்வாண்டின் போது 32 அடி ஏணி ஒன்றிற்கு பரிமாற்றல் செய்திருந்ததுடன் அவ் ஏணியின் பெறுமதியாகிய ரூபா 70,938 இனை மூலதனப்படுத்தியிருந்ததுடன் பரிமாற்றப்பட்ட 20 அடி ஏணியின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் அகற்றப்பட்டிருக்காமையால் பொறியும் பொறித்தொகுதியும் கணக்கில் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கு ரூபா 33,992 வீதம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்திருந்த ரூபா 1,500,000 இற்கான 06 நிலையான வைப்புச் சான்றிதழ்களின் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 108,002 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 85,142 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் கடன்பட்டோர் மற்றும் வட்டி வருமானம் ரூபா 22,860 வீதம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு "கிராமத்துக்கு கிராமம் - வீட்டுக் வீடு" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 1,847,104 பெறுமதியான 04 நிர்மாண வேலைகளுக்காக பெற வேண்டிய மூலதன உதவி மற்றும் செலுத்த வேண்டிய மூலதன செலவுகளுக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் கடன்பட்டோர் மற்றும் மூலதன வருமானம் மற்றும் கடன்கொடுத்தோர் மூலதனச் செலவு அதே தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 7,632,131 இற்கான 34 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய மூலதன செலவுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதன செலவுகள் ரூபா 7,632,131 வீதம் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஓ) மீளாய்வாண்டின் போது ரூபா 914,916 தொகை பெறுமதியான 03 மகநெகும நிர்மாண வேலைகளுக்காக பெற வேண்டிய மூலதன உதவிக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் கடன்பட்டோர் மற்றும் மூலதன வருமானம் ரூபா 914,916 வீதம் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஔ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணி ஏல விற்பனைகள் மூலம் சபைக்கு சாட்டப்பட்டிருந்த காணிகளின் பெறுமதி ஆகிய ரூபா 16,129,325 இற்கான காணிகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

05 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 3,451,369 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.3 தொங்கல் கணக்குகள்

---

மீளாய்வாண்டிற்கு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 81,816 இற்கான தொங்கல் கணக்குகள் செலவு மீதியினை இனங்கண்டு கணக்குகளை சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 101,615,377 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள் நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள், கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், நாளது வரை பேணப்பட்ட தொக்கு, மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள், கடன் பதிவேடு மற்றும் முற்பண பதிவேடு நிலையான வைப்புச் சான்றிதழ் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

---------------------------------------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 இல் காட்டப்பட்ட விடயங்களின் கீழ் எடுத்துக்கொள்ளப்படாத விடயமொன்றான 02 வெளிநாட்டு கல்விச் சுற்றுலாகளுக்காக வெளிநாடு செல்வதற்கான முறையான அங்கீகாரம் இன்றி தலைவர், உப தலைவர் மற்றும் 06 அங்கத்தவர்களுக்கு ரூபா 1,500,000 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது.

2. நிதி மீளாய்வு

-----------------------

2.1 நிதி விளைவு

-----------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 9,437,038 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,309,947 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 வீத வரி

-------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 25,458,796 இற்கான வீத வரி 1987 இன் 15 இலக்கம் கொண்ட பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 குத்தகை

--------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,203,287 இற்கான குத்தகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 கடை வாடகை

------------------------

லபுதுவ வர்த்தக தொடர் கட்டிடத்தின் 40 கடைகளின் வாடகை அறவீடுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1999 செப்டம்பர் 30 திகதியன்று கடைகள் ஆரம்பத்தில் வாடகைக்கு கொடுத்திருந்ததுடன் 13 வருடங்களுக்கு பின்னர் இக் கடைகள் 2012 ஜனவரி மாதம் முதல் செல்லுபடியாகும் விதமாக 2013 ஜனவரி மாதத்தில் மீண்டும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) 1999 உடன்படிக்கை கையொப்பமிட்ட பின்னர் கணக்காய்வு திகதியாகிய 2015 செப்டம்பர் 11 திகதி வரை உடன்படிக்கை மீண்டும் புதுப்படுத்தியிருக்கவில்லை.

(iii) 1999 ஆண்டின் போது கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் 2 வது நிபந்தனையின் பிரகாரம் புதிய பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை செலுத்தாமையால் 2012 ஜனவரி முதல் 2015 செப்டம்பர் வரை கடைகளில் இருந்து ரூபா 6,878,750 இற்கான வாடகை வருமானத்தை சபை இழந்துள்ளது.

2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 151,748 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 500,502 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 28,153,346 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முறை சாராக் கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டம்

----------------------------------------------------------------------------------------------------

2014 ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சு செயலாளரினால் 2014 மே 05 திகதி வழங்கப்பட்ட இலக்கம் : 1/2014 கொண்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் பிரதேச சபை பராமரிப்பு அலகின் மூலம் சனசமூக உட்கட்டமைப்பு பராமரிப்பதற்காக அனைத்து பிரதேச சபைக்கும் மாதாந்தம் ரூபா 1,000,000 வீதம் வழங்கும் அடிப்படையில் பிரதேச சபைக்கு 2014 ஆண்டில் ரூபா 4,000,000 தொகை கிடைத்திருந்தது.

இந்த சுற்று நிருபத்தின் பந்தி 3 இன் பிரகாரம் ஏதேனும் சந்தர்ப்பத்தில் புதிய செயற்திட்டங்களை இனங்காணக் கூடாது. அத்துடன் தற்போது காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் திருத்தங்கள் மற்றும் பராமரித்தல் விடயங்களுக்காக மாத்திரம் பணத்தினை

பயன்படுத்த வேண்டும் என அறிவித்திருந்த போதிலும் அதற்கு மாற்றமாக 11 மந்திரிமாருக்கு 11 லப்டொப் கணனிகள் ரூபா 1,120,900 தொகைக்கு கொள்வனவு செய்வதற்காக 2015 பெப்ரவரி 26 திகதி கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பளிக்கப்படாத காசோலைகள்

-----------------------------------------------------

2011 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் ரூபா 20,339 இற்கான மதிப்பளிக்கப்படாத காசோலைகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போது செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் பிணை வைப்பு

----------------------------------------

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் (அதிகாரம் ix) விதி 180 மற்றும் 182 இன் பிரகாரம் காசாளர் கணக்காய்வுத் திகதியாகிய 2015 செப்டம்பர் 11 திகதி வரை பிணை வைத்திருக்கவில்லை.

(இ) பதவியணிக் கடன்

----------------------------------

சபையில் கடமையாற்றிய இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள/ ஓய்வு பெற்றுள்ள 28 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 104,566 இற்கான கடன் மீதி ஒன்று 2012 ஆண்டிற்கு முன்னர் முதல் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஈ) பழுதடைந்த வாகனங்களை அகற்றுதல்

-------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான 03 பழுதடைந்த வாகனங்கள் அகற்றுவதற்கு 2013 அக்டோபர் 01 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2015 செப்டம்பர் 11 திகதி வரை 02 வருடங்களை அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அகற்றுதல் விடயம் முடிவாக்குவதற்காக சபைக்கு இயலாதுள்ளது.

(உ) பொறித் தொகுதி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்

------------------------------------------------------------------------------

உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கு தேவையான வாகனங்கள் பற்றிய 2014 மார்ச் 10 திகதி உள்ளூராட்சி ஆணையாளரினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் சபைச் செயலாளரினால் 06 வாகனங்கள் சபைக்கு தேவையென 2014 மார்ச் 14 திகதி அறிவித்திருந்தார்.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் விண்ணப்பிக்கப்பட்ட பெக்கோ இயந்திரத்திற்கு பதிலாக மோட்டார் கிரேட்டர் வழங்கியதன் மூலம் சபைக்கு சொந்தமான பாதைகளில் ஓட்ட முடியாத தேவையற்ற வாகனம் ஒன்று வழங்கப்பட்டது.

(ii) சபையினால் கோறப்படாத குரூ கப் வண்டி ஒன்று வழங்கியிருந்தது.

(iii) சபைக்கு கிடைத்திருந்த மோட்டார் கிரேட்டர், குரூ கப் வண்டி மற்றும் டம்ப் டிரக்டர் வண்டி என்பவற்றினை கணக்காய்வுத் திகதி ஆகிய 2015 செப்டம்பர் 11 திகதி வரை பதிவுச் சான்றிதழ் கிடைத்திருக்கவில்லை.

3.3 ஒப்பந்த நிருவாகம்

---------------------------------

ஹுபுகல சிரிதர்ம ரதன மாவத்தை

---------------------------------------------------------

60 மீற்றர் கொங்கிரீட் அச்சு பரப்புவதற்காக 2013 ஜுலை 26 திகதி ரூபா 499,464 தொகைக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2013 திசெம்பர் 30 திகதி 3 மாதங்களில் வேலையை பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தன. நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டு அளவைப் பத்திரம் மற்றும் ரூபா 497,865 இற்கான பில் பத்திரம் ஒன்று 2014 மார்ச் 06 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 448,078 தொகை ஒன்று கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. கணக்காய்வுத் திகதியாகிய 2015 செப்டம்பர் 11 திகதி வரை தடுத்து வைத்தல் பணம் ரூபா 49,787 இனை செலுத்தியிருக்கவில்லை.

நிர்மாண வேலை தொடர்பாக 2015 செப்டம்பர் 11 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது அச்சுக் கற்கள் விரிவடைந்து கிடங்கு ஏற்பட்டு பாதை கீழிறங்கிய நிலையில் காணப்பட்டது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

பாதீட்டின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திடையே முரண்கள் காணப்பட்டதுடன் சில செலவு விடயங்கள் சேமிப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்